بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் – இலண்டன்.**

JULY 26
2013

**தமிழாக்கம் : மவ்லவி S. அப்துல் காதிர் சாஹிப்**

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் அன்ஆம் -ன் 152 முதல் 154 வரை உள்ள வசனங்களை ஓதினார்கள்:**

قُلْ تَعَالَوْا أَتْلُ مَا حَرَّمَ رَبُّكُمْ عَلَيْكُمْ أَلَّا تُشْرِكُوا بِهِ شَيْئًا وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا ۖ وَلَا تَقْتُلُوا أَوْلَادَكُمْ مِنْ إِمْلَاقٍ ۖ نَحْنُ نَرْزُقُكُمْ وَإِيَّاهُمْ ۖ وَلَا تَقْرَبُوا الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ ۖ وَلَا تَقْتُلُوا النَّفْسَ الَّتِي حَرَّمَ اللَّهُ إِلَّا بِالْحَقِّ ۚ ذَٰلِكُمْ وَصَّاكُمْ بِهِ لَعَلَّكُمْ تَعْقِلُونَ

وَلَا تَقْرَبُوا مَالَ الْيَتِيمِ إِلَّا بِالَّتِي هِيَ أَحْسَنُ حَتَّىٰ يَبْلُغَ أَشُدَّهُ ۖ وَأَوْفُوا الْكَيْلَ وَالْمِيزَانَ بِالْقِسْطِ ۖ لَا نُكَلِّفُ نَفْسًا إِلَّا وُسْعَهَا ۖ وَإِذَا قُلْتُمْ فَاعْدِلُوا وَلَوْ كَانَ ذَا قُرْبَىٰ ۖ وَبِعَهْدِ اللَّهِ أَوْفُوا ۚ ذَٰلِكُمْ وَصَّاكُمْ بِهِ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ

وَأَنَّ هَٰذَا صِرَاطِي مُسْتَقِيمًا فَاتَّبِعُوهُ ۖ وَلَا تَتَّبِعُوا السُّبُلَ فَتَفَرَّقَ بِكُمْ عَنْ سَبِيلِهِ ۚ ذَٰلِكُمْ وَصَّاكُمْ بِهِ لَعَلَّكُمْ تَتَّقُونَ

*பொருள்: நீர் (அவர்களிடம்) கூறுவீராக! வாருங்கள்! உங்கள் இறைவன் உங்களுக்குத் தடுத்தவற்றை நான் உங்களுக்குப் படித்துக் காட்டுகின்றேன். நீங்கள் எப்பொருளையும் அவனுக்கு இணையாக்காதீர்கள். மேலும் பெற்றோரிடத்தில் மிக்க நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். நாமே உங்களுக்கும், அவர்களுக்கும் உணவளிக்கின்றோம். தீமைகள் வெளிப்படையாக இருப்பினும், மறைமுகமாக இருப்பினும், அவற்றின்பால் நெருங்காதீர்கள். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அல்லாஹ் உங்களுக்கு இது குறித்துக் கட்டளையிடுகின்றான்.*

*மேலும் (அவன் இவ்வாறு கட்டளையிடுகின்றான்.) நீங்கள் அநாதைகளின் உடைமையை, அவர் தமது வாலிபப் பருவத்தை அடையும்வரை முறையின்றி நெருங்காதீர்கள். மேலும் அளவையையும், நிறுவையையும் முழுமையாகக் கொடுப்பதில் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். நாம் தகுதிக்கு அப்பாற்பட்ட சுமையை எவர்க்கும் வழங்குவதில்லை. நீங்கள் பேசும் பொழுது, அது உறவினர் (குறித்து) ஆக இருப்பினும் நேர்மையைக் கடைபிடியுங்கள். மேலும் அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். நீங்கள் கவனத்தில் கொள்ளும் பொருட்டு அவன் உங்களுக்கு இதனை வலியுறுத்திக் கூறுகின்றான்.*

*நிச்சயமாக இது எனது நேரான வழியாகும். எனவே நீங்கள் இதனைப் பின்பற்றுங்கள். (ஏனைய) வழிகளைப் பின்பற்றாதீர்கள். இல்லையென்றால் அவை உங்களை அவனுடைய வழியிலிருந்து திருப்பி விடும். நீங்கள் உங்களை இறையச்சமுள்ளவர்களாக்குவதற்காக அவன் உங்களுக்கு இதனை வலியுறுத்திக் கூறுகின்றான். (6:152-154)*

கடந்த குத்பாவில் நான் ரமலான் மாதத்தில் திருக்குர்ஆன் இறங்கத் தொடங்கியது என்றும், இதன் அடிப்படையில் திருக்குர்ஆன் மற்றும் ரமலான் மாதத்திற்கிடையில் ஒரு சிறப்பான தொடர்பு உள்ளது என்றும் எடுத்துக் கூறினேன். ஆனால் நாம் ரமலான் மாதத்தில் திருக்குர்ஆனை ஓதுவதுடன் அதன் கட்டளைகளை சிந்திக்க வேண்டும். அவற்றை நம் வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் ரமலான் மாதத்திற்கும் திருக்குர்ஆனுக்கும் மத்தியிலுள்ள தொடர்பு நமக்கு பயன் அளிக்கும். இல்லையென்றால் திருக்குர்ஆன் எந்த நோக்கத்திற்காக இறங்கியதோ அந்த நோக்கம் நிறைவேறாது என்றும் நான் கடந்த குத்பாவில் கூறினேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

மிருகத்தின் நிலையிலிருக்கும் மனிதனை, மனிதனின் நிலைக்குக் கொண்டு வருவதே திருக்குர்ஆனின் நோக்கமாகும். பிறகு மனித நிலையிலிருந்து உயர்த்தி நாகரிகமிக்க மனிதனாக ஆக்குவதாகும். இதனால் சரீஅத்தின் விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுடன் படித்தரங்கள் உயர வேண்டும். அதன் பிறகு அம்மனிதனை இறைவனைச் சார்ந்த மனிதனாக ஆக்குவதே திருக்குர்ஆனின் நோக்கமாகும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் அறிவு மற்றும் செயல் ஆகியவற்றின் முழுமையின் வழிகாட்டல் உள்ளது. اِهْدِنَا الصِّرَاطَ என்பதில் அறிவின் முழுமையின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ என்பதில் செயலின் முழுமை காணப்படுகிறது. முழுமையான மற்றும் பூர்த்தியான விளைவுகள் கிடைக்க வேண்டும். உதாரணமாக, ஒரு செடி நடப்படுகிறது. அது முழுமையாக வளராத வரை பூக்களும் காய்களும் தராது. அவ்வாறே ஒரு நேர்வழியில் உயர்வான மற்றும் முழுமையான விளைவுகள் இல்லையென்றால் அந்த நேர்வழி உயிரற்ற நேர்வழியாகும். அதில் வளர்ச்சிக்கான எந்த சக்தியும் திறனும் இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனின் நேர்வழியின்படி செயல்படுபவர் உயர் தரமான முழுமைத்தன்மைகளைப் பெறலாம். மேலும் இறைவனுடன் அவருக்கு ஓர் உண்மையான தொடர்பு ஏற்படுகிறது. திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கு ஏற்ப செய்யப்படுகின்ற நற்செயல்கள் தூய்மையான மரத்திற்கு ஒப்பாக திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. அந்த செயல்கள் வளர்கின்றன; பூக்கின்றன; கனி தருகின்றன. அவற்றில் ஒரு சிறப்பான சுவையும் இனிமையும் பிறக்கின்றன.

ஆகவே திருக்குர்ஆனின் உரிமையை நிறைவேற்றியவாறு ஓதி வந்தால், சரீஅத்தின் கட்டளைகளின்படி செயல்பட வேண்டும் என்ற கவனம் இருந்தால், மனிதனிடம் ஓர் ஆக்கப்பூர்வமான சிறந்த மாற்றம் ஏற்படுகிறது. உயர்வான நல்லொழுக்க மதிப்புகள் உருவாகின்றன. திருக்குர்ஆனின் போதனைகளின்படி செயல்படுகின்ற மனிதர் மிருகத்தின் நிலையிலிருந்து உயர்ந்து நாகரிகம் மற்றும் இறைவனின் பண்புகளை மேற்கொண்ட மனிதர் ஆவார். திருக்குர்ஆனில் இறைவன் தூய மரத்தை உதாரணமாகக் காட்டுகிறான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

اَصْلُهَا ثَابِتٌ وَّفَرْعُهَا فِى السَّمَآءِ ۙ

*அதன் வேர்கள் உறுதியுடன் நிலைத்திருக்கின்றன. மேலும் அதன் கிளைகள் வானத்தின் உயர்வை எட்டக் கூடியதாகும். (14:25)*

**இதை விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த இடத்தில் அல்லாஹ் மிகவும் விளக்கமாகக் கூறுகிறான். அதாவது ஈமான், விதை மற்றும் மரத்தைப் போன்றதாகும். மேலும் செயல்கள் நீர் ஊற்றுவதற்கு ஒப்பானதாகும். அதாவது ஒரு செடிக்கு நீர் பாய்ச்சுவதற்கு ஒப்பாக செயல்கள் அமைகின்றன. திருக்குர்ஆனில் விவசாயியின் உதாரணம் காணப்படுகிறது. ஒரு விவசாயி நிலைத்தில் விதைப்பது போன்றே இது ஈமானின் விதையாகும். அங்கு அந்த விதைக்கு நீர் பாய்ச்சுவதைப் போன்று இங்கு ஈமானுக்கு செயல்கள் உள்ளன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

செயல்கள் இல்லாத ஈமான், ஆறுகள் இல்லாத தோட்டத்திற்கு சமமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது தண்ணீர் அல்லது வாய்க்கால் அல்லது ஆறு ஆகியவை ஏதுமில்லாத தோட்டத்திற்கு ஒப்பானதாகும். மரம் நட்டிய பிறகு சொந்தக்காரர் அதற்கு நீர் பாய்ச்சவில்லை என்றால் அந்த மரங்கள் காய்ந்து விடும். இவ்வாறே ஈமானின் நிலையும் உள்ளது. وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا அதாவது வெறும் எளிதான காரியங்களை மட்டும் செய்து விட்டு ஓய்ந்து விடாதீர்கள். மாறாக இந்த வழியில் கடினமான உழைப்பும் அவசியமாகும்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். திருக்குர்ஆன் உங்களை என்னவாக ஆக்க விரும்புகிறதோ அவ்வாறு ஆக வேண்டும் என்றால், சரீஅத்தின் விதிமுறைகளையும் கட்டளைகளையும் படிப்படியாக நீங்கள் மேற்கொள்ளுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது சிறு முயற்சிகளை

மேற்கொண்டவாறு ஓய்ந்திருக்கும் போது தானாகவே நடந்து விடும் ஒன்றல்ல. மாறாக, இதற்காக கடினமாக உழைப்பது அவசியமாகும் என்று கூறுகிறார்கள்.

நான் இதற்கு முன்னரும் கூறி வந்துள்ளேன். ரமலான் மாதம் மற்றும் இம்மாதத்தில் திருக்குர்ஆன் இறங்கியது ஆகிய இவற்றின் பலன், நாம் இதன் கட்டளைகளை நமது செயல்களின் அங்கமாக ஆக்கும் போதுதான் கிடைக்க முடியும். நாம் இதன்படி நமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். இந்த வழியில் நாம் கடினமாக உழைக்க வேண்டும். நாம் நம்மை வேதனைக்கு உட்படுத்தியவாறு இதன் மீது செயல்பட முயற்சி செய்பவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் நாம் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த முடியும். அப்போது தான் நாம் திருக்குர்ஆன் இறங்கியதன் நோக்கத்தைப் புரிபவர்களாக இருக்க முடியும்.

ஆகவே இந்த ரமலான் நமக்கு பல கடின உழைப்புகளின் பால் கவனமூட்டுகிறது. வெளிப்படையாகவும் நாம் கடின உழைப்பை மேற்கொள்கிறோம். உண்பதையும் குடிப்பதையும் தவிர்த்துக் கொள்வது, இன்னும் பல ஆகுமான காரியங்களிலிருந்து தவிர்ந்து கொள்கிறோம். அத்துடன் இந்நாட்களில் நாம் திருக்குர்ஆனைப் புரிந்து கொள்வதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துகிறோம். மேலும் இந்தக் கட்டளைகளை நமது அன்றாட வாழ்க்கையின் அங்கமாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும். இதனால் நாம் வானத்தைத் தீண்டும் பசுங்கிளைகளாக விளங்க வேண்டும். இறைவனுடன் தொடர்புடைய மக்களாகவும், இறைவன் துஆக்களை ஏற்றுக் கொள்கின்ற மக்களாகவும் விளங்குவதுடன் நாம் நமது ஈமானின் வேர்களை உறுதியாக ஆக்க வேண்டும். மேலும் வானத்தை எட்டுகின்ற பசுமையான கிளைகளாக விளங்குகின்ற செயல்களைச் செய்பவர்களாக ஆக வேண்டும். இதனால் எமது துஆக்களும் இறைவனின் சந்நிதியில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

நான் ஓதிய வசனங்களிலும் இறைவன் சில கட்டளைகளின் பால் கவனமூட்டியுள்ளான். இந்த இரண்டு மூன்று வசனங்களில் கூறப்பட்டுள்ள கட்டளைகள் எல்லாம் இறைவனின் நெருக்கத்தைப் பெற்றுத் தருபவையாகும். இவை இறையச்சத்தின்படி நம்மை வழிநடத்துபவையாகும். அல்லாஹ்வின் உரிமைகளின் பக்கமும் அவனது அடியார்களின் உரிமைகளின் பக்கமும் நம்மை வழிநடத்துகின்றன.

இவ்வசனங்களின் மொழியாக்கத்தையும் நான் உங்களுக்கு வாசித்துக் காட்டினேன். இதில் என்ன கட்டளைகள் உள்ளன என்ற உங்கள் எல்லாருக்கும் நன்றாக விளங்கி இருக்கும். நினைவூட்டுவதற்காக நான் மீண்டும் உங்களுக்கு இவற்றை எடுத்துக் கூறுகிறேன்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

1. *இறைவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள்.*
2. *பெற்றோருடன் நல்ல முறையில் நடப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள். அவர்களுடன் தீய முறையில் நடப்பது உங்கள் மீது ஹராமாகும்.*
3. *நீங்கள் உணவு குறைவாகி விடும் என்ற அச்சத்தால் உங்கள் சந்ததிகளைக் கொலை செய்யாதீர்கள்.*
4. *மறைவான மற்றும் வெளிப்படையான எல்லாவித வெட்கக்கேடுகளில் இருந்தும் விலகிக் கொள்ளுங்கள். இவற்றின் பக்கத்தில் கூட நெருங்காதீர்கள்.*
5. *அல்லாஹ் ஆகுமானது என்று கூறியதைத் தவிர வேறு எந்த உயிரையும் கொலை செய்யாதீர்கள். ஆகுமானது என்றால் எப்படி என்பதைப் பற்றிய விளக்கமும் தனியாக கூறப்பட்டுள்ளது.*
6. *அநாதைகளின் செல்வத்தை நெருங்காதீர்கள்.*
7. *அநாதைகள் விபரம் தெரியும் பருவத்தை அடைந்தவுடன் எந்த சாக்குப்போக்கும் சொல்லாமல் அவர்களின் செல்வத்தை அவர்களிடம் திரும்பக் கொடுத்து விடுங்கள்.*
8. *அளவை மற்றும் நிறுவையில் நீதியைக் கடைபிடியுங்கள். எல்லா நிலையிலும் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள்.*
9. *உறவு மற்றும் நட்பு ஆகியவை உங்களை நீதியிலிருந்து விலக்கி விட வேண்டாம்.*
10. *உங்களுடைய உடன்படிக்கைகளைப் பூர்த்தி செய்யுங்கள். பிறகு எல்லா நிலையிலும் நேர்வழியில் நிலைத்திருக்க முயற்சி செய்து கொண்டிருங்கள்.*

இவை யாவும் மிகவும் முக்கியமான கட்டளைகளாகும். ஏனைய கிளை கட்டளைகளும் பிரிவுகளும் உள்ளன. இவற்றின்படி செயல்படுகின்ற மனிதன் இறையச்சத்தின்படி வழிநடப்பவர் என்று அழைக்கப்படுவார். அவர் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற முயற்சி செய்பவர் என்று அழைக்கப்படுவார்.

இதில் முதலாவதாக இறைவன் கவனமூட்டியுள்ள அம்சம், இன்னும் சொல்வதென்றால் கட்டளையிட்டுள்ள அம்சம், இறைவனுக்கு எதையும் இணை வைக்காதீர்கள். இந்த செயலை நீங்கள் ஒருபோதும் செய்யக் கூடாது. இது உங்கள் மீது ஹராமாகும். உங்களுடைய ரப் ஆக இருக்கின்ற இறைவனுக்கு நீங்கள் இணை வைக்காதீர்கள். அவன் உங்களை படைத்தவன் ஆவான். அவன் உங்களது அறிவு, உடல் மற்றும் பௌதீக திறன்களைப் படிப்படியாக வளர்த்து அவற்றை முழுமைப்படுத்துபவன் ஆவான். அவன் எல்லா அருட்கொடைகளையும் வழங்குபவன் ஆவான். ஆகவே இப்படிப்பட்ட சக்திகளைக் கொண்ட இறைவன் மற்றும் இப்படிப்பட்ட அருட்கொடைகளை வழங்குபவனாகிய இறைவனுக்கு எதையாவது இணையாக்குபவன் யார்?

ஆனால் மக்கள் புரிந்து கொள்வதில்லை. அவர்கள் இணை வைக்கின்றனர். ஷிர்க்கின் தத்துவத்தை ஆழமாக சிந்தித்துப் புரிவதில்லை. இப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த இறைவனுக்கு நிகராக பல பொய்த் தெய்வங்களைக் கொண்டு நிறுத்துகின்றனர். வியப்பாக இருக்கின்றது! எல்லா காலத்திலும் எல்லா நிலையிலும் மக்களிடம் இந்த நடவடிக்கை இருந்து வந்துள்ளது. எனவே நபிமார்கள் தோன்றியவுடன் முதலில் ஷிர்க்கிற்கு எதிராகப் பேசுகின்றனர். இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துவதன் பக்கம் கவனமூட்டுகின்றனர். அல்லாஹ் கூறுகிறான்: ஷிர்க் என்ற பாவத்தை நான் மன்னிப்பதில்லை.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

எல்லா பாவங்களும் மன்னிக்கத் தகுந்தவையாகும். ஆனால் அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள்கள் உள்ளனர் என்று நம்புவது மன்னிக்க முடியாத பாவமாகும்.

إِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِيمٌ *நிச்சயமாக (அவனுக்கு) இணை வைப்பது மாபெரும் அநீதியாகும். (31:14)*

لَا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ *(4:49)*

இங்கு சிலைகளை வணங்குவது என்ற ஷிர்கைப பற்றி கூறவில்லை. மாறாக காரணிகளை வணங்குவது என்ற ஷிர்க் கூறப்பட்டுள்ளது. மேலும் உலக பயன்பாட்டிற்கு உரியவற்றின் மீது அதிக ஈடுபாடு காட்டுதல், அதாவது உலகில் பல பொருட்களை மனிதன் பயன்படுத்துகிறான். அவற்றின் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துதல் ஆகிய இதன் பெயர் தான் ஷிர்க் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பாவங்கள் என்பது குக்கா குடிப்பதற்கு நிகரானதாகும். இதை கை விடுவதால் எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. இது கடினமாகவும் தென்படுவதில்லை. ஆனால் இறைவனுக்கு இணை வைத்தல் என்ற பாவம் அபின் பயன்படுத்துவதற்கு நிகரானதாகும். இந்தப் பழக்கத்தைக் கை விடுவது முடியாததாகும்.

இன்னும் இதன்பால் கவனமூட்டியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** இன்னும் ஆழத்திற்கு சென்று கூறுகின்றார்கள்:

ஷிர்க் மூன்று வகைப்படும். **ஒன்று,** பொதுவாக மக்கள் சிலைகளையும் மரங்களையும் வணங்குவதாகும். சில மக்கள் மரங்களையும் வணங்குகின்றனர். இது எல்லாருக்கும் தெரிந்த பொதுவான பெரிய ஷிர்க் ஆகும். ஷிர்க்கின் **இரண்டாவது வகை**, காரணிகளின் மீது எல்லைக்கு அதிகமாக நம்பிக்கை கொள்வது. அதாவது, இன்ன வேலை நடக்கவில்லை என்றால் நான் அழிந்து விடுவேன் என்றும் அளவிற்கு அதிகமாக நம்பிக்கை வைப்பது. இதுவும் ஷிர்க் ஆகும். ஷிர்க்கின் **மூன்றாவது வகை**, இறைவனுக்கு முன்னால் தன்னையும் ஒரு பொருட்டாக மதித்தல். அதாவது நானும் எதையாவது செய்து விடுவேன் என்று நம்புவது ஷிர்க் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:** உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஒரு மூஃமின் ஒரு வேலையைச் செய்வதற்கு முன் இன்சா அல்லாஹ் என்று கண்டிப்பாக சொல்ல வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

பெரிய வகை ஷிர்க்கில் இன்றைய அறிவு வளர்ச்சி மிகுந்த காலகட்டத்தில் யாரும் பிடியுண்டு கிடக்கவில்லை. அதாவது மரங்களை வணங்குவது போன்ற செயலில் யாரும் ஈடுபாடு காட்டவில்லை. ஆனால் உலகத்தையே பெரிதும்

சார்ந்துள்ள இக்காலகட்டத்தில் காரணிகளை அளவுக்கு அதிமாக நம்பிக்கை வைக்கப்படும் ஷிர்க் அதிகமாகி விட்டது. அதாவது உலகப் பொருட்களைச் சார்ந்திருப்பது, காரணிகளைச் சார்ந்திருப்பது, மக்களைச் சார்ந்திருப்பது மிகவும் அதிகமாகி விட்டது.

இக்காலத்தில் செல்வத்தின் மீதும் மக்களின் மீதும் அதிக நம்பிக்கை வைக்கப்படுகிறது. தாம் வேலை செய்யும் இடத்தில் முதலாளியின் மீது அதிக நம்பிக்கை உள்ளது. சிலர் தம் மேலதிகாரிகளை நம்பியுள்ளனர். இந்த நிலை உருவாகி விட்டால் அதாவது காரணிகளை அதிகமாகவும், தேவைக்கு அதிகமாகவும் சார்ந்து இருந்து விட்டால், பிறகு மனிதன் தன் பிறப்பின் நோக்கத்தை மறந்து விடுகிறான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருவருடைய இருப்பை அளவுக்கு அதிகமாக அவசியம் என்று கருதினால் அது வணக்கத்திற்குரியதாக ஆகி விடுகிறது. ஒருவர் இன்னொருவரைப் பார்த்து இவர் இல்லாமல் என்னால் வாழவே முடியாது என்று கருதினால் பிறகு அவர் இறைவனுக்கு நிகராக ஆகிவிடுகிறார். இதனால் வணங்கத்தக்க ஒன்றாக அவர் ஆகி விடுகிறார். அவருடன் தொடர்பு கொள்வது இறை வணக்கமாகி விடுகிறது. ஆனால் அல்லாஹ் ஒருவனே வணக்கத்திற்குரியவன் ஆவான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ *அதாவது இறைவனை வணங்குவது மட்டுமே ஜின்கள் மற்றும் மனிதர்களின் படைப்பின் நோக்கமாகும். (51:57)*

இறைவணக்கம் என்றால் என்ன? **இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:** மக்களே! உங்களைப் படைத்த உங்கள் இறைவனை வணங்குங்கள். அதாவது உங்கள் பணிகளை நிறைவேற்றுபவன் அந்த இறைவன் என்று நம்புங்கள். வெற்றியை வழங்குபவன் அவன் ஒருவனே ஆவான். இதுவே இறைவனை வணங்கும் தரமாகும். அவன் மீதே நம்பிக்கை வையுங்கள்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்களைப் படைத்த அந்த இறைவனே வணக்கத்திற்குரியவன் ஆவான். அவனே உயிருடன் இருப்பவன் ஆவான். ஆகவே அவனிடமே உள்ளத்தை ஈடுபட வையுங்கள். எல்லாம் அழிந்து விடுபவையாகும். உயிருடன் இருப்பவன் அந்த ஒரே இறைவன் மட்டுமே ஆவான். ஆகவே அவனுடனே உள்ளம் ஒன்றி விடுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனுடன் தொடர்பு வைத்திருப்பதும் அவனைத் தவிர உள்ள அனைத்தையும் பொருட்டாக ஆக்குவது கூடாது. இதுவே இறை வணக்கமாகும். எவர் தம் சந்ததிகளை அல்லது தம் பெற்றோர்களை அல்லது வேறு ஏதாவது ஒன்றை எப்போதும் நினைத்துக் கொண்டே இருக்கும் அளவிற்கு அதிகமாக நேசிப்பது ஒரு சிலை வணக்கமாகும். இந்துக்களைப் போன்று சிலைகளின் முன்னால் உட்கார்ந்து வணங்குவது அல்லது அவற்றிற்கு சிரம் பணிவது ஆகியவை மட்டும் சிலை வணக்கம் ஆகாது. மாறாக எல்லைக்கு அதிகமாக அன்பும் நேசமும் கொள்வதும் கூட சிலை வணக்கமாகும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மக்களே! நீங்கள் ஈடிணையற்ற அந்த ஏக இறைவனை வணங்குங்கள். அவனே உங்களையும் உங்கள் மூதாதையர்களையும் படைத்தவன் ஆவான். பூமியை உங்களுக்கு விரிப்பாகவும், வானத்தைக் கூரையாகவும் ஆக்கிய உங்கள் இறைவனுக்கு நீங்கள் அஞ்ச வேண்டும். மேலும் உங்களுக்கு வானத்திலிருந்து மழை பொழியச் செய்து பலவகையான உணவுகளை பழங்களிலிருந்தும் படைத்தான். ஆகவே நீங்கள் தெரிந்து கொண்டே உங்களது பயனுக்காக படைக்கப்பட்ட பொருட்களை, எல்லாம் வல்ல இறைவனுக்கு இணையாக ஆக்காதீர்கள்.

பிறகு இறைவணக்கத்தின் உண்மைத் தன்மையை எடுத்துரைத்தவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனின் பிறப்பின் தலையாய குறிக்கோள் இறைவணக்கமே ஆகும். மனிதன் தன்னிடம் உள்ள எல்லா மாசுகளையும், பலவீனங்களையும் விட்டு விலகி உள்ளம் என்ற நிலத்தை ஒரு விவசாயி நிலத்தை சுத்தம் செய்வதைப் போன்று சுத்தம் செய்ய வேண்டும். உண்மையில் இதுவே இறைவணக்கமாகும். அரபு மக்கள் கூறுவர். சுர்மாவை நன்றாக நுணுக்கி கண்களில் தீட்டுவதற்கு தகுதியாக ஆக்குதல். அவ்வாறே உள்ளம் என்ற நிலத்தில் எவ்வித கல்லும்,

மாசும் இல்லாமல் அதில் தூய்மையான ரூஹ் மட்டுமே குடியிருக்கும் வகையில் துப்புரவாக்க வேண்டும். இதற்குப் பெயர்தான் இறை வணக்கமாகும். ஒரு கண்ணாடியை இந்த அளவிற்கு சுத்தம் செய்தால் அதில் பிம்பம் நன்றாகத் தெரியும். அவ்வாறே நிலத்தை சுத்தம் செய்வதால் அதில் பல்வேறு கனி வகைகள் தருகிறது. ஆகவே இறைவனை வணங்குவதற்காகவே படைக்கப்பட்ட மனிதன் தன் உள்ளத்தை தூய்மையாக்கினால், அதில் எந்தவித மேடு பள்ளமும் கோணலும் கற்களும் மாசுகளும் இல்லாத வகையில் துப்புரவாக்கினால் அந்த தூய்மையான உள்ளத்தில் இறைவன் தென்படுவான்.

நான் மீண்டும் கூறுகிறேன். இறைவனின் அன்பு எனும் மரம் அந்த உள்ளத்தில் முளைத்து வளரும். உள்ளம் தூய்மையடைந்து இறைவனுக்காகவே எல்லாவற்றையும் செய்ய ஆரம்பித்து விட்டால், அவனையே எல்லாம் எனக் கருதி அவனை மட்டுமே சார்ந்திருந்தால் அந்த உள்ளத்தில் இறைவன் தென்படுவான். அந்த உள்ளத்தில் இறைவனின் அன்பு எனும் மரங்கள் முளைக்கும். அவற்றில் இனிமையான, தூய்மையான கனிகள் விளையும். أُكُلُهَا دَآئِمٌ அவற்றின் கனிகள் நிரந்தரமானவை என்பதை அது மெய்ப்பிக்கும்.

**இன்னோரிடத்தில் இதை அவர்கள் இவ்வாறு விளக்குகிறார்கள்.**

கண்ணியமிக்க இறைவனுக்கு முன்னிலையில் நிரந்தரமான மரியாதையுடன் எழுந்து நிற்பது தனிப்பட்ட அன்பு இல்லாமல் சாத்தியமில்லை. அதாவது அல்லாஹ்வின் முன்னிலையில் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மிகவும் பணிவுடனும், தாழ்மையுடனும் நிற்பது அல்லாஹ்வுடன் தனிப்பட்ட தொடர்பு மற்றும் அன்பு இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். இது இல்லாமல் சாத்தியமில்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அன்பு என்பது இங்கு ஒருதலைப்பட்சமான அன்பு அல்ல. மாறாக படைத்தவன் மற்றும் படைக்கப்பட்டவன் ஆகிய இருவருக்கும் உள்ள பரஸ்பர அன்பை குறிக்கும்.

மனிதன் இறைவனுடன் இவ்வாறு அன்பு பாராட்டும் போது இறைவன் புறமிருந்து பதில் கிடைக்கிறது. இதனால் மரணிக்கும் ஒரு மனிதன் மீது விழக்கூடிய ஒரு மின்னல் அவனை எரித்து விடுவதைப் போன்று மனிதனுக்கு உள்ளிருந்து அது வெளிப்படுகிறது. அது மனித பலவீனங்களை எரித்து விடுகிறது. இரண்டும் இணைந்து ஆன்மீக வடிவத்தை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. அதாவது இடி, மின்னல் மனிதன் மீது விழுகிறது. அதனால் மனிதன் எரிந்து சாம்பலாகி விடுகிறான். அவ்வாறே இந்த அன்பு ஒரு நெருப்பாக இருக்க வேண்டும்.

ரமலான் என்ற சொல்லுக்கு வெப்பம் என்று பொருள் உள்ளது. மனித பலவீனங்கள் மற்றும் தீய பழக்கங்கள் ஆகிய அனைத்தையும் எரித்து விட வேண்டும். மனிதனை முழுமையாக ஆன்மீகம் ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும்.

இதுவே மனிதனின் வாழ்வின் குறிக்கோளாகும். இதற்காகவே நாம் ரமலான் மாதத்தைக் கழிக்கிறோம். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம் முன்னால் வைத்த இறைவணக்கத்தின் உயர் தரமாகும். இந்த உயர் தகுதி கிடைத்து விட்டால் இறைவனின் மீதுள்ள நேசம் எல்லா நேசத்தையும் வென்று விடுகிறது. பிறகு மனிதன் எல்லா விதமான பாவங்களிலிருந்தும் தூய்மையாகி விடுகிறான்.

இந்த ரமலானில் இப்படிப்பட்ட இறைவணக்கத்தைச் செலுத்தவும் அதில் நிலைத்திருக்கவும் அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை நல்குவானாக!

பிறகு அல்லாஹ் பிறப்பித்த அடுத்த கட்டளை பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதாகும். இறைவன் அமைத்துள்ள இந்த வரிசைக் கிரமமானது இயற்கையாகவே மனிதனுடைய வாழ்வின்படி அமைந்துள்ளது. அதாவது இறைவனுக்குப் பிறகு இவ்வுலகில் பெற்றோர்கள் தான் குழந்தைகளை வளர்க்கவும், அவர்களின் தேவைகளைக் கவனிக்கவும் செய்கின்றனர். ஏழை பெற்றோர்கள் கூட தம் வட்டத்தில் இதற்காக முயற்சி செய்கின்றனர். அவர்களின் குழந்தைகளுக்கு சரியான வளர்ச்சி கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். இதற்காக பொதுவாக அவர்கள் எண்ணற்ற தியாகங்களையும் செய்கின்றனர். ஆகவே பெற்றோர்களுடன் சிறந்த முறையில் நடந்து கொள்ளுங்கள் என்று கூறுகிறான்.

**இறைவன் கூறுகிறான்:** وَقَضٰى رَبُّكَ اَلَّا تَعۡبُدُوۡۤا اِلَّاۤ اِيَّاهُ وَبِالۡوَالِدَيۡنِ اِحۡسَانًا ؕ اِمَّا يَبۡلُغَنَّ عِنۡدَكَ
الۡكِبَرَ اَحَدُهُمَاۤ اَوۡ كِلٰهُمَا فَلَا تَقُلْ لَّهُمَاۤ اُفٍّ وَّلَا تَنۡهَرۡهُمَا وَقُلْ لَّهُمَا
قَوۡلًا كَرِيۡمًا ۝

*உம்முடைய இறைவன் மிகவும் வலியுறுத்தி இவ்வாறு கட்டளையிட்டுள்ளான். நீங்கள் அவனையன்றி வேறெதனையும் வணங்காதீர்கள். மேலும் (உங்கள்) பெற்றோரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களுள் ஒருவர் அல்லது அவர்களிருவரும் உம்முடைய வாழ்நாளில் முதுமையை எய்தி விடுவார்களாயின், நீர் (அவர்களது விசயத்தில் வெறுப்பைக் காட்டும் விதத்தில்) அவர்களைச் சீ என்று கூடச் சொல்லாதீர். அவர்களை ஏசவும் வேண்டாம்; அவர்களிடத்து எப்போதும் இனிமையாகப் பேசுவீராக! (17:24)*

சில நேரம் எனக்கு புகார்கள் வருகின்றன. அறிவில்லாத பிள்ளைகளின் பெற்றோரிடமிருந்து அல்ல. மாறாக நன்றாக படித்த பிள்ளைகளின் பெற்றோரிடமிருந்து புகார்கள் வருகிறது. அந்த பிள்ளைகள் பெற்றோரின் கடமையை நிறைவேற்றுவதில்லை என்பதுடன் அவர்கள் மீது அநீதியிழைக்கின்றனர். சில சகோதரிகள் தம் சகோதரர்களைப் பற்றி எழுதுகின்றனர். பெற்றோரின் மீது கையை உயர்த்துகின்றனர். குறிப்பாக சொத்து விவகாரம் வரும்போது பெற்றோர்களை அவமதிக்கும் நிலை பொதுவாக ஏற்படுகிறது. பெற்றோர்களின் வாழ்நாளிலேயே பிள்ளைகளுக்கு பெற்றோரின் சொத்துக்களின் பால் கவனம் ஏற்படும் போது இந்த அவமரியாதை ஆரம்பமாகி விடுகிறது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு சொத்துக்களை கொடுத்த பின் அவர்களுடன் இன்னும் அதிக கடுமைகள் ஆரம்பமாகி விடுகின்றன. இந்த பெற்றோர்கள் சொத்துக்கள் இருந்தும் அதை பிள்ளைகளுக்கு கொடுத்து விட்டு வீடு வீடாக அலைகின்ற நிலை ஏற்படுகிறது. நமக்கு மத்தியிலும் இவ்வாறான உதாரணங்கள் காணப்படுகின்றன.

இந்த நாட்டிலும் இளைய பருவத்தில் காலடி எடுத்து வைக்கும் பிள்ளைகள் சுதந்திரம் என்ற பெயரில் பெற்றோருடன் அவமரியாதையுடன் நடந்து கொள்ள ஆரம்பித்து விடுகின்றனர். இங்குள்ள கல்வி பிள்ளைகளுக்கு பெற்றோரின் மரியாதையைக் கற்றுக் கொடுப்பதில்லை. இங்கு பொதுவாக ஒரு குறிப்பிட்ட வயதை எட்டிய பிறகு பிள்ளைகள் சுதந்திரமாகி விடுகின்றனர் என்று கூறப்படுகிறது. அல்லது இங்குள்ள இந்த சுதந்திரம் தர மதிப்பை பொருட்படுத்துவதில்லை. அல்லது இந்த சுதந்திரம் பெற்றோரின் கண்ணியத்தை நிலைநாட்டுவதில்லை. இது கல்வியில் முன்னேற்றம் அல்ல. மாறாக இது அறிவீனமாகும்.

பெறறோர்களுடன் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களை மதிக்க வேண்டும். அவர்களைப் பார்த்து சீ என்று கூட சொல்லக் கூடாது என்பது இஸ்லாம் கூறும் அழகிய போதனைகளாகும். இவ்வாறு பெற்றோரின் கண்ணியத்தை நிலைநாட்டுகிறது. பெற்றோர்கள் காட்டிய கருணைக்கு பரிகாரமாக அவர்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்று போதிக்கிறது. கருணை காட்டுதல் என்பது சிறந்த முறையில் நடந்து கொள்ளுதல் ஆகும். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெற்றோரின் கருணைக்கு உங்களால் ஒருபோதும் பரிகாரம் செலுத்தவே முடியாது.

இவ்வாறு கருணை காட்டிய பெற்றோர் மீது கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் எவ்வளவு அழகிய போதனையைத் தந்துள்ளது என்று பாருங்கள்.

**அல்லாஹ் கூறுகிறான்: பெற்றோருக்காக இவ்வாறு துஆ செய்யுங்கள்.**

رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا *அதாவது என் இறைவா! நான் குழந்தையாக இருந்த சமயத்தில் இவர்கள் என் மீது கருணை காட்டியது போன்றே நீ அவர்கள் மீது கருணை காட்டுவாயாக! (17:25)*

அவர்கள் என்மீது கருணை காட்டியவாறு என்னை வளர்த்தனர். ஆகவே இதுவே இஸ்லாம் கற்றுத் தரும் முஸ்லிம்களுக்கு தம் பெற்றோருடன் நடந்து கொள்ள வேண்டிய சிறந்த வழிமுறையாகும். இந்த துஆ இவ்வுலகிற்கு மட்டும் உரிய துஆ அல்ல. மாறாக மரணத்திற்குப் பிறகும் அவர்களது பதவிகள் இந்த துஆ செய்ய வேண்டும். அதாவது இவ்வுலகில் நாம் இந்த துஆவை செய்யும் போது நம் சார்பாக உள்ள இந்த குறையை துஆவின் மூலமாக அல்லாஹ் நிவர்த்தி செய்வானாக! இறைவன் தன் சிறப்பான அருளைக் கொண்டு நமது குறையைப் போக்குவானாக! இரண்டாவதாக இந்த கருணையின் தொடர் மறுவுலகிலும் தொடர்கிறது. அவர்களின் பதவிகளை உயர்த்துகின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் அல்லாத பிறரை வணங்காதீர்கள். பெற்றோருடன் கருணையோடு நடந்து கொள்ளுங்கள். இதையே இறைவன் விரும்புகின்றான். உண்மையில் இது ஒரு சிறந்த ருபூபிய்யத் ஆகும். மனிதன் ஒரு குழந்தையாக இருக்கிறான். அவனிடம் எந்த சக்தியும் இருப்பதில்லை. அப்படிப்பட்ட நிலையில் அவனுடைய தாய் அவனுக்கு என்னென்ன தொண்டுகளைச் செய்கிறாள். மேலும் தாயின் இந்த எல்லா ஏற்பாடுகளையும் தந்தை கவனித்துக் கொள்கிறார். இறைவன் தன் அருளால் பலவீனமான படைப்பாகிய அந்த குழந்தையைப் பராமரிப்பதற்காக இரண்டு

வழியை உருவாக்கியுள்ளான். தன் நேசத்தின் ஒளியிலிருந்து ஒரு கதிரை அவர்களது உள்ளத்திலும் வழங்கியுள்ளான். ஆனால் பெற்றோருடைய அன்பு என்பது தற்காலிகமானதாகும். ஆனால் இறைவனின் அன்பு நிரந்தரமானதாகும். இங்கு வேறுபாடு உள்ளது. இறைவன் புறமிருந்து உள்ளத்தில் போடப்படாத வரை, எந்த மனிதரும் அவர் நண்பனாக இருந்தாலும் அல்லது சக வயதுடையவராக இருந்தாலும் அல்லது ஓர் உயர்மட்ட ஆட்சியாளராக இருந்தாலும் யாரும் யாரையும் நேசிக்க முடியாது. தந்தை தன் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக எல்லாவித கஷ்டங்களையும் திறந்த மனதுடன் தாங்கிக் கொள்கிறார். மேலும் பிள்ளைகளின் வாழ்விற்காக தான் மரணமடைவதையும் பொறுத்துக் கொள்கிறார். இது முழுமையான ருபூபிய்யத்தின் இரகசியமாகும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

فَلَا تَقُلْ لَّهُمَآ اُفٍّ وَّلَا تَنْهَرْهُمَا அதாவது உங்கள் பெற்றோரிடம் அவமரியாதையாகப் பேசாதீர்கள். அவர்களின் புனிதத் தன்மைக்கு களங்கம் விளைவிக்கும் விதமாகப் பேசாதீர்கள். இந்த வசனம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விளித்து இந்தக் கட்டளையைக் கூறுகிறது. ஆனால் உண்மையில் இந்தக் கட்டளை சமுதாயத்திடம் திரும்புகிறது. ஏனென்றால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் தாயும் தந்தையும் அவர்களின் சிறு வயதிலேயே இறந்து விட்டனர். இந்த கட்டளையில் ஒரு இரகசியமும் உள்ளது. அது இந்த வசனத்தின் மூலம் ஒரு புத்தியுள்ள மனிதர் புரிந்து கொள்ள முடியும். நீர் உனது பெற்றோரை மதிப்பீராக! என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து கூறப்பட்டுள்ளது. மேலும் உம்முடைய பேச்சில் அவர்களின் தர மதிப்பை உணர்ந்து பேசீவராக! என்று கூறப்பட்டுள்ளது என்றால் பிறர் தம் பெற்றோரை எந்த அளவுக்கு கண்ணியத்துடன் நடத்த வேண்டும். இதன் பக்கம் தான் இரண்டாவது வசனம் சுட்டிக் காட்டுகிறது.

وَقَضٰى رَبُّكَ اَلَّا تَعْبُدُوْٓا اِلَّآ اِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا அதாவது நீர் இறைவனை மட்டுமே வணங்க வேண்டும். மேலும் பெற்றோர்களுடன் கருணையோடு நடந்து கொள்ள வேண்டும் என்று இறைவன் விரும்புகிறான்.

இவ்வசனத்தில் சிலைகள் ஒன்றும் இல்லை, அந்த சிலைகள் உங்கள் மீது எந்த கருணையும் காட்டவில்லை. அவை உங்களைப் படைக்கவில்லை. நீங்கள் குழந்தையாக இருந்த போது இவை உங்களை பராமரிக்கவும் இல்லை. இறைவனைத் தவிர வேறு ஒரு கடவுளையும் வணங்கலாம் என்று இறைவன் அனுமதித்திருந்தால் நீங்கள் பெற்றோரையம் வணங்குங்கள் என்று கட்டளையிட்டிருப்பான். ஏனெனில் பெற்றோர்களும் ஒரு வகையில் ரப் ஆவார்கள். எல்லா மனிதனும் இன்னும் எல்லா விலங்குகளும் பறவைகளும் கூட தம் பிள்ளைகள் சிறு வயதாக இருக்கும் போது அதை காப்பாற்றுகின்றனர். ஆகவே இறைவனின் ருபூபிய்யத்திற்கு பிறகு இவர்களின் ருபூபிய்யத்தும் ஒன்றாகும். அவர்களிடம் காணப்படும் ருபூபிய்யத்தின் உணர்வு இறைவன் புறமிருந்து வழங்கப்பட்டதாகும். அதாவது பிள்ளைகளை வளர்க்கின்ற உணர்வு, பிள்ளைகளை பராமரிப்பதில் ஈடுபாடு, பிள்ளைகளுடன் அன்பு மற்றும் நேசம் கொள்வது ஆகியவையும் அல்லாஹ்வின் புறமிருந்து வழங்கப்பட்டவையாகும்.

இதுவே பெற்றோருக்குரிய உயர் தகுதியாகும். இதை நாம் எப்போதும் நம் கண்முன் நிறுத்த வேண்டும். ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அவனுடைய மூக்கு மண்ணைத் தொடட்டும்; அவனுடைய மூக்கு மண்ணைத் தொடட்டும் என்று இந்த சொற்களை மூன்று முறை கூறினார்கள். சஹாபாக்கள் அவர் யார்? என்று கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தம் வாழ்வில் வயோதிகப் பெற்றோரைக் கொண்டிருந்தும் அவர்களுக்கு சேவை செய்து சொர்க்கத்தை அடைய முடியாத அந்த மனிதன் என்றார்கள்.

இவ்வசனங்களிலுள்ள அடுத்த கட்டளை, وَلَا تَقْتُلُوْٓا اَوْلَادَكُمْ مِّنْ اِمْلَاقٍ அதாவது உணவு குறைவாக உள்ளதால் உங்களுடைய சந்ததிகளைக் கொலை செயயாதீர்கள என்று கூறுகின்றான். இதற்கு பல அர்த்தங்கள் உள்ளன. இங்கு திருக்குர்ஆனின் கட்டளைகளின் அழகும் தென்படுகிறது. அதாவது முதலில் பிள்ளைகளிடம் நீங்கள் உங்கள் பெற்றோருக்கு சேவை செய்ய வேண்டும். அவர்களிடம் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களைப் பார்த்து எந்தவொரு சூழ்நிலையிலும் சீ என்று கூட சொல்லக் கூடாது. அவர்கள் கூறிய ஏதாவது ஒன்று தவறாகப் படும்போது வெறுப்பு ஏற்படுகிறது. ஆனால் உங்கள் பெற்றோர்கள் கூறியது உங்களுக்கு தவறாகப் பட்டாலும் அதற்குப் பதில் பேசக் கூடாது. மாறாக உங்கள் சார்பாக அவர்களுக்கு கருணை மற்றும் மென்மை ஆகியவையே வெளிப்பட வேண்டும் என்று கட்டளையிட்டான்.

இப்போது பெற்றோர்களுக்கு கட்டளையிடுகிறான். நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த முறையில் தர்பிய்யத் கொடுக்க வேண்டும். இந்த தர்பிய்யத்தில் எதுவும் தடையாக இருக்கக் கூடாது. ஏழ்மையும் இதற்கு தடையாக

இருக்கக் கூடாது. உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல தர்பிய்யத் கொடுங்கள். அவர்கள் ஆன்மீகம் மற்றும் நல்லொழுக்கத்தில் இறந்தவர்களாக ஆகிவிடக் கூடாது. இவ்வாறு தர்பிய்யத் வழங்குவது பெற்றோர் மீது கடமையாகும். மேலும் அவர்களின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தாமல் இருந்து அவர்களை கொலை செய்யாதீர்கள். அனாவசியமான சேமிப்புகளைச் செய்வதற்காக பிள்ளைகளின் ஆரோக்கியத்தைக் கெடுத்து விடாதீர்கள். ஆகவே பெற்றோர்களுக்கு ருபூபிய்யத் என்ற உயர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

எனவே பிள்ளைகளின் தேவைகளைக் கவனித்துக் கொள்வது அவர்கள் மீது கடமையாகும். பிள்ளைகளை சமூகத்தில் சிறந்த அங்கமாக்குவது பெற்றோர்களின் கடமையாகும். ஏனென்றால் இதை செய்யவில்லை என்றால் இது பிள்ளைகளைக் கொலை செய்வதற்கு நிகராகும். எந்தவொரு அறிவுள்ள மனிதனும் உடல் ரீதியாக தன் பிள்ளைகளைக் கொலை செய்வதில்லை. சில பைத்தியக்காரர்களைத் தவிர அல்லது இறைவனை மறந்து விட்ட மக்களைத் தவிர அல்லது அவர்களுக்கு சுய விருப்பங்கள் மற்றும் பேராசைகள் இருக்கின்றன. இதற்கான உதாரணங்கள் பத்திரிகைகளில் அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றன. அதாவது தந்தை தன் நண்பர்களுடன் சேர்ந்து தன் பிள்ளைகளைக் கொலை செய்து விட்டதாக செய்திகள் வருகின்றன. அல்லது சில சமயம் மேற்கத்திய நாடுகளிலும் இவ்வாறு நிகழ்கிறது. அதாவது தாய் அல்லது தந்தை பிள்ளைகளுடன் சேர்த்து தன்னையும் எரித்துக் கொண்டனர். சில சூழ்நிலைகளில் வெறுப்படைந்து அவ்வாறு செய்து விடுகின்றனர். இது எல்லை மீறிய நிராசை அடையும் நிலையாகும். இது ஒரு வகையில் பைத்திய நிலையாகும்.

ஆனால் பொதுவாக அவ்வாறு யாரும் செய்வதில்லை. நான் கூறியது போன்று இவ்வசனத்திற்குப் பல அர்த்தங்கள் உள்ளன. கொலை என்பதற்கு பல அர்த்தங்கள் உள்ளன. இதன் ஒரு பொருள் தம் பிள்ளைகளக்கு நல்ல முறையில் தர்பிய்யத் கொடுக்காமல் இருப்பதும் அல்லது நல்ல கல்வியை வழங்காமல் இருப்பதும் பிள்ளைகளைக் கொலை செய்வதாகும்.

சிலர் தம் வியாபாரத்தில் அதிகமாக ஈடுபடுவதால் தம் பிள்ளைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துவதில்லை. இதை மறந்துவிடுகின்றனர். இதன் காரணமாக பிள்ளைகள் சீர்கெட்டு விடுகின்றனர். இந்த புகார்கள் இப்போது ஜமாஅத்திலும் காணப்படுகிறது. தாய்மார்கள் புகார் கூறுகின்றனர். அதாவது தந்தை பெரும்பாலும் வெளியில் இருப்பதால், வீட்டில் இல்லாத காரணத்தால் பிள்ளைகளின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. இதனால் பிள்ளைகள் சீர்கெட்டுக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக பிள்ளைகள் டீன் ஏஜ்– ஐ அடையும் போது இளைய பருவத்தில் காலடி எடுத்து வைக்கும் போது அவர்களுக்கு தந்தையின் கவனமும் நட்பும் தேவைப்படுகிறது.

நான் இதற்கு முன்னரும் பல முறை இதன் பக்கம் கவனமூட்டியுள்ளேன். பிள்ளைகள் வெளியில் சென்று பல தவறான பழக்கங்களை பழகி வருகின்றனர். இது பிள்ளைகளின் நல்லொழுக்கக் கொலையாகும். தந்தை என்ன தான் நூறு காரணங்கள் கூறினாலும், நாங்கள் உழைப்பதெல்லாம் பிள்ளைகளுக்காகத்தான் என்று கூறினாலும் இவ்வாறு உழைப்பதால் என்ன பயன் இருக்கிறது? பிள்ளைகளின் தர்பியத்தை கெடுக்கும் இப்படிபட்ட செல்வத்தால் என்ன பயன்? அவ்வாறு நீங்கள் அவர்களுக்காக செல்வத்தை விட்டுச் செல்வதால் பிள்ளைகள் அதை பராமரிக்க முடியுமா? முடியாதா? என்று உங்களுக்கு என்ன தெரியும்? செல்வமும் அழிந்து விடும்; பிள்ளைகளும் கெட்டுவிடுவர். மேற்கத்திய நாடுகளில் நமது ஜமாஅத்திலும் இப்போது இது அதிகமாக பரவி வருகிறது. அதாவது தாய்மார்களும் வேலைக்குச் சென்று விடுகின்றனர். அல்லது வீட்டை முழு கவனத்துடன் பராமரிப்பதில்லை. ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி இங்குமங்கும் அலைந்து கொண்டிருக்கின்றனர். வேலை பார்க்கும் பெண்களுடைய குழந்தைகள் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வருகின்றனர். அந்த குழந்தைகளைக் கவனிப்பவர் யாரும் இருப்பதில்லை. வீட்டுச் செலவுக்காக வேலை பார்க்க வேண்டியது வருகிறது என்று தாய்மார்கள் காரணம் சொல்கின்றனர். ஆனால், பல பெண்கள் தமது சொந்த செலவுக்காக வேலை பார்த்து வருகின்றனர். வேலையிலிருந்து களைப்படைந்து வீடு திரும்பும் போது அவர்கள் பிள்ளைகளைக் கவனிக்க முடிவதில்லை.

அந்தப் பிள்ளைகள் சில சமயம் கவனிப்பார் இல்லாததால், தாழ்வு மனப்பான்மையின் காரணமாக அழிந்து கொண்டிருக்கிறார்கள். சில நேரம் நமக்கு இவ்வாறும் தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன. அவர்களின் கணவர்கள் உதவாக்கரையாக உள்ளனர். அவர்களின் இந்த தன்மைகளின் காரணமாக பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆகவே அப்படிப்பட்ட கணவர்கள் மற்றும் தந்தைகள் இறைவனுக்கு அஞ்ச வேண்டும். நீங்கள் உங்கள் உதவாக்கரைத் தனத்தால் உங்களுடைய பிள்ளைகளைக் கொலை செய்யும் குற்றத்திற்கு ஆளாகாதீர்கள்.

கணவர் தன் மனைவியை சரியாகக் கவனிக்காவிட்டால் இதுவும் கொலையாகும். முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதற்கு மிகவும் சிறந்த உதாரணம் ஒன்றைக் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: மனைவி கர்ப்பமாக இருக்கும் போது உணவின் பால் சரியாக கவனம் செலுத்தாமல் இருந்தால் பிறக்கவிருக்கும் குழந்தை பலவீனம் அடைகிறது. இதுவும் சந்ததியைக் கொலை செய்வதாகிறது.

இதற்கு இன்னொரு பொருளும் உள்ளது. ஏழ்மையின் காரணாக குடும்பக்கட்டுப்பாடு செய்வது அல்லது குழந்தை பிறப்பை நிறுத்துவது கூடாது. தாயின் உடல் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு பிள்ளை பேறை நிறுத்தலாம்.

சில நேரம் மருத்துவர் குழந்தையின் நிலைமையின் காரணமாக இவ்வாறு ஆலோசனை கூறுகின்றனர். சில நேரம் கண்டிப்பாக அபார்சன் செய்ய வேண்டும் என்று கூறுகின்றனர். ஏனெனில் தாயின் உடல் ஆரோக்கியம் மோசமாக இருக்கும். எனவே அது ஆகுமானதாகும். இதன் காரணமாக அபார்சன் செய்ய அனுமதி உள்ளது. ஆனால் ஏழ்மையின் காரணமாக அல்ல.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

نَحْنُ نَرْزُقُكُمْ وَإِيَّاهُمْ *நாம் அவர்களுக்கும் உணவளிக்கிறோம். உங்களுக்கும் உணவளிக்கிறோம் (6:152)* என்று கூறுகிறான்.

**இன்னோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

إِنَّ قَتْلَهُمْ كَانَ خِطْئًا كَبِيرًا *அதாவது இந்த கொலை மிகப்பெரிய குற்றமாகும் (17:32)* என்று கூறுகிறான்.

ஒரு உண்மையான முஸ்லிம் ஒருபோதும் பெரிய பாவங்கள் மட்டுமல்ல. சின்னச்சின்ன பாவங்களையும் செய்யமாட்டார். ஆகவே நாம் இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். நாம் நமது பிள்ளைகளின் தர்பிய்யத்தின் பால் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்காக நேரத்தை ஒதுக்குங்கள். அவர்களின் கல்வியின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அவர்களை ஜமாஅத்துடன் இணைத்து வைப்பதன் பால் கவனம் செலுத்துங்கள். பிள்ளைகளுக்கு நல்ல தர்பிய்யத் கிடைக்கும் வகையில் உங்களது வீட்டின் சூழ்நிலையை அமைத்துக் கொண்டு பிள்ளைகள் சமூகத்தின் சிறந்த அங்கமாக விளங்கி நாடு மற்றும் சமுதாய வளர்ச்சியில் பங்கெடுப்பவர்களாக ஆக வேண்டும்.

பிள்ளைகளை நல்ல முறையில் வளர்ப்பது மற்றும் அவர்களின் கல்வி ஆகிய பொறுப்பு பெற்றோரைச் சேர்ந்ததாகும். ஆகவே பெற்றோர்கள் சாக்குப் போக்கு கூறாமல் தம் பிள்ளைகளுக்கு சிறந்த தர்பிய்யத் கொடுப்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு தர்பிய்யத் கொடுப்பது பெண்களின் பொறுப்பாகும் என்று தந்தை கூற முடியாது. அவ்வாறே தாய்மார்கள் தந்தையின் மீது இந்த பொறுப்பை முற்றிலும் சுமத்திவிட முடியாது. இது இருவரின் மீதும் கடமையாகும். தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரின் பங்கும் இருக்கும் நிலையில்தான் பிள்ளைகள் சிறந்த தர்பிய்யத்தைப் பெறுவது சாத்தியமாகும். இருவரும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

இங்கு இந்த நாடுகளில் தலாக் அதிகமானதன் காரணமாக Single Parent குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். இந்த குழந்தைகள் வீணாகின்றனர். இவர்களால் பள்ளிக்கூடத்தின் நிர்வாகமும் வெறுப்பில் உள்ளது. காவல்துறையும் வெறுப்பில் உள்ளது. மற்றும் அக்கம் பக்கத்தினரும் வெறுப்பில் உள்ளனர். இப்படிப்பட்ட பிள்ளைகள் தான் குற்றவாளிகளாகவும் மாறுகின்றனர். இவர்கள் தொடக்கத்தில் இருந்தே சீர்கெட்டு விடுகின்றனர். பெற்றோர் சரியாக கவனிப்பதில்லை. இங்கு நான் இது தொடர்பான வருத்தத்திற்குரிய ஒன்றையும் கூற விரும்புகிறேன். நமது ஜமாஅத்திலும் தலாக்குகளின் பக்கம் அதிகமாக கவனம் திரும்பி வருகிறது. இதன் காரணமாக பிள்ளைகள் சீர்கெட்டு விடுகின்றனர். சில தலாக்குகள் தொடக்கத்திலேயே நடந்து விடுகின்றன. சில நேரம் பிள்ளைகள் பிறந்து பல வருடங்கள் கழித்து தலாக் நடக்கிறது. ஆகவே தாய்களும் தந்தைகளும் தங்களது சுய கவுரவம் மற்றும் தன் சுயநலம் ஆகியவற்றை விட்டு விட்டு பிள்ளைகளுக்காக தியாகம் செய்ய வேண்டும்.

திருக்குர்ஆனின் கட்டளைகளின்படி செயல்பட அல்லாஹ் நம் அனைவருக்கும் நல்வாய்ப்பு நல்குவானாக! மூன்று அம்சங்களை நான் எடுத்துக் கூறியுள்ளேன். மீதமுள்ளதை இன்சா அல்லாஹ் வரக்கூடிய குத்பாக்களில் எடுத்துரைப்பேன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at **BAIT-UL-FUTUH MOSQUE,** London

on **26.07.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,

TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456